**கடுவெல மாநகர சபை - 2023**

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுவெல மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கடுவெல மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பு பெறுமதி ரூபா 1,180,597,373ஆன போதும் நிதி கூற்றுகளில் ரூபா 1,160,000,000 ஆக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதாக. | நிலையான வைப்புகள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 102,509,015 ஆன போதிலும் நிதி கூற்றுகளில் ரூபா 94,138,078 ஆக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | நிலையான வைப்பு வட்டி வருமானத்தை சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 21,852,642 ஆன போதிலும் நிதி கூற்றுகளில் ரூபா 34,390,267 ஆக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | கடந்த சில வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற இரத்து செய்யப்பட்டுள்ள மற்றும் வேலை நிறைவு செய்யப்பட்டுள்ள கொடுப்பனவு | -மேற்படி- | வேலை கடன் கொடுத்தோர் மீதிகளை சரியாக அடையாளம் காண்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 52,417,977 வேலை கடன் கொடுத்தோர் மீதியினுல் உள்ளடக்கப்பட்டுள்ளதன் காரணமாக நடைமுறை பொறுப்புக்கள் அந்த அளவில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களில் வேலை நிறைவு செய்யப்பட்ட ரூபா 46,404,003 ஆன கட்டிடம் மீளாய்வாண்டில் கட்டிட கணக்குக்கு கணக்கிடப்படாததன் காரணமாக கட்டிட மீதி அந்த அளவில் குறைவாகவும் அதற்கான பெருமானத் தேய்வு கணக்கிடப்படாததன் காரணமாக வருடத்தின் மிகை ரூபா 1,160,100 ஆக கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | நிலையான சொத்துக்கள் சரியாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் பெருமானத் தேய்வுகள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | விநியோகிக்கப்பட்ட போதும், கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சியிருந்த ரூபா 94,740 பெறுமதியான 12 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்க்கப்பட்டிராத காசோலைகளுக்காக உரிய வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக. | கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1653 | சபையினால் 02 முச்சக்கர வண்டிகள், 37 உளவு இயந்திரங்கள், 03 டிப்பர் வாகனங்கள், ஒரு லாரி மற்றும் ஒரு சிங்கள் கெப் வாகனம் உள்ளடங்களாக 44 வாகனங்களின் மயிலோ மீட்டர் செயலிழந்த நிலையில் செலுத்தப்பட்டிருந்தது. | மைலோமீட்டர் செயலிழந்த வாகனங்களை மீண்டும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு உழவு இயந்திரங்களின் மீட்டர் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கடுமையான | மயிலோ மீட்டரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சூரிய ஒளி மற்றும் மழைக்கு உள்ளாக்கப்படுவதால் அடிக்கடி செயல் இழப்புக்கு உள்ளாவதாக. | |
| (ஆ) | பொது நிர்வாக சுற்று நிறுவம் | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 2(iv) ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக விரல் அடையாள இயந்திரத்தை பாவிக்காமல் நகராட்சி ஆணையாளர் உள்ளடங்களாக நிறைவேற்று அதிகாரம் உள்ள 04 உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி நிலை தரத்தினாலான 04 உத்தியோகத்தர்களுக்காக கூட்டு மொத்தம் ரூபா 505,158 ஆன தொகையொன்று விடுமுறை தின சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | கழிவு சேகரிக்கும் நிலையம், பிரீமிக்ஸ் நிறுவனம் மற்றும் மாவட்ட அலுவலகம் ஆகிய மூன்றின் கடமையை பூரண படுத்துவதுடன் பொது சேவைகள் நடவடிக்கைகளுக்கு நகராட்சி ஆணையாளராக பங்கெடுப்பதற்கு அடிக்கடி நேர்வதுடன், அந்த நடவடிக்கைகளில் நேரடியாக தலையிட்டு விரைவாக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு நாளும் அலுவலகத்திற்கு சமூகமளித்தல் மற்றும் வெளியேறுதலை குறிப்பிடுவதற்கு விரல் அடையாள இயந்திரத்தை பாவனைக்குட்படுத்துவதில்லை என்பதாக. | அனைத்து அரச உத்தியோகத்தர்களின் சேவை அறிக்கை படுத்தல் சுற்று நிருபனத்தின் பிரகாரம் இடம் பெற வேண்டும். |
| (ii) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 3.1 ஆம் பந்தி | சபையிடம் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் 117 இயந்திர உபகரணங்களுக்காக எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசீலனை ஒன்று உரிய காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டதாக சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் சான்றுறுதி படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பரிசீலனைகள் இடம்பெற்றதாக கணக்காய்வின் போது உறுதியெச்ச முடியாதிருந்தது. | 2023 ஆம் வருடத்தில் கடுவல மாநகர சபைக்கு உரித்தான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசீலனை இடம் பெற்றுள்ளதுடன் 2024 ஆம் வருடத்தில் எரிபொருள் நுகர்வு பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்படுவதற்காக நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதாக. | எரிபொருள் பரிசீலனைகள் சுற்று நிருபத்தின்அறிவுரைகளின் படி இடம்பெற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2017 டிசம்பர் 21ஆம் திகதி 02/2017 ஆம் இலக்க திரைசேரி சுற்று நிருபம். | சபையினால் கொல்வனவு செய்யப்பட்டுள்ள வீல் லோடர், எக்ஸ் கலெக்டர் இயந்திரம் மற்றும் மோட்டர் க்ரேடர் இயந்திரம் என்பன இதுவரை சபையின் பெயருக்கு பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணிகள், வாகன தொழிற்சாலையின் கீழ் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதனால் இந்த 03 இயந்திரங்களையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் சபைக்கு கிடைக்கப்பெறும் போது கிடைப்பணவு பத்திரம் மற்றும் விநியோகிப்பதற்கு கட்டளை விநியோகிக்கப்பட்டுள்ளது என்பதாக. | சபையின் பெயருக்கு பதிவு செய்தல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,486,268ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 243,511,413 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராட்சி ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீத வரியும் வரியும் | 189,810 | 210,079 | 172,380 | 37,700 | 182,500 | 196,309 | 156,376 | 39,933 |
| வாடகை | 9,924 | 9,557 | 11,098 | - | 12,622 | 10,059 | 7,960 | 2,099 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 10,335 | 10,335 | 11,504 | - | 10,671 | 10,671 | 10,545 | 125 |
| ஏனைய வருமானம் | 14,843 | 14,843 | 14,604 | 239 | 13,240 | 13,240 | 11,542 | 1,698 |
| | 224,912 | 244,814 | 209,586 | 37,939 | 219,033 | 230,279 | 186,423 | 43,855 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரியும் வரியும்** | | |
| (i) 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் சில வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற அறவிடப்பட வேண்டிய வீத வரி மீதி ரூபா 89,425,049 ஆகும். | 2023 ஆம் வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை வீத வரி மீதி ரூபா 89,425,049 ஆக காணப்பட்ட போதும் 2024 ஆம் வருடத்தில் ஜனவரியில் இருந்து ஏப்ரல் வரை ரூபா 17,413,624 ஆக கிடைக்கப்பெற்றிருந்ததுடன் மேலும் நிலுவையின் அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 72,011,425 ஆக காணப்பட்டது. | நிலுவை வீத வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் சில வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற கிடைக்கப் பெற வேண்டிய களியாட்ட வரி வருமானம் ரூபா 3,080,840 ஆகும். | களியாட்ட வரி நிலுவைத் தொகை ரூபா 2,404,976 ஆகும். இந்த நிலுவைத் தொகை சினிமா அரங்கொன்றினால் செலுத்தப்பட வேண்டிய தொகை ஒன்றாக காணப்படுவதுடன் அதில் ரூபா 2,368,922 காக கடுவல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அற விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திதியில் உள்ளவாரான நிலுவை வாடகை வருமானம் ரூபா 14,877,403 அறவிட்டுகொள்வதற்கு சபையினால் ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | தொடர்ந்து நிலுவை காணப்படுகின்ற கடையறைகளை முத்திரையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிலுவை தொகை செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வாடகை தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) மாகாண சபையின் பிரதான செயலாளர் இடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 டிசம்பர் 31 ஆம் | 2023 ஆம் வருடத்திற்கு உரிய முத்திரை கட்டணம் தற்போது பிரதிகள் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன. | கட்டணங்களை சரியாக அடையாளம் கண்டு அறவிட்டுக் கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| திகதியில் கிடைக்கப் பெற வேண்டி இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 37,262,123 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 652,848,723 ஆகும் | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளை சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் பிரதான காரணங்கள் 02 டை நிறைவேற்றிக் கொள்வதற்காக உப விதிகளை விதிக்கப்பட முடியுமாயிருந்தும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | கடுவல பஸ் தரிப்பிடம் தொடர்பாக உப விதிகள் மற்றும் விளையாட்டு நிலம் தொடர்பான உபவிதிகள் தொடர்பான குறைபாடுகள் தயாரிக்கப்பட்டு மீண்டும் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | உபவிதிகளின் ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்கு துரிதப் படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ரன் பேலெஸ்ஸ கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான ஜே.சி.பி இயந்திரம் செயலிழந்ததன் காரணமாக தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து ஜே.சி.பி இயந்திரம் ஒன்று மணித்தியாலத்துக்கு ரூபா 6,400 வீதம் வாடகை அடிப்படையில் 2022 செப்டெம்பர் 05 ஆம் திகதி பெற்றுக்கொண்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. செயல் இழந்திருந்த இயந்திரம் ரூபா 4,951,834 தொகைக்கு திருத்தப்பட்டு 2023 மார்ச் 27ஆம் திகதி சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்து வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட இயந்திரம் 2023 ஆகஸ்ட் 22 ஆம் திகதி வரையும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக குறித்த காலப்பகுதிக்காக ரூபா 5,750,400 சபையினால் இயந்திர உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | காணப்பட்ட இயந்திரத்தை திருத்தம் மேற்கொண்டு சபைக்கு கையளிக்கும் போது அந்த இயந்திரத்தின் செயற்பாட்டாளரின் வேண்டுகோளுக்கு இனங்க பத்தரமுள்ள மாவட்ட அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன், புதிதாக ஈடுத்தப்பட்ட சாரதிக்கான பயிற்சியை பெற்று கொடுப்பதற்கு நேரிருந்ததுடன் மத்திய நிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுவதற்காக 2003.08.22 ஆம் திகதி வரை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட இயந்திரத்துக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டததாக. | இயந்திரம் திருத்தப்பட்ட பின்னர் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீள்சுழற்சி மத்திய நிலையத்தின் பொருள் கொள்வனவு விற்பனை மற்றும் மீதி சமப்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், கானாமல் போனவை, மீண்டும் | மீள்சுழற்சி விற்பனை மத்திய நிலையத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பொருட் பற்றாக்குறையை தடுப்பதற்காக பொருட்கள் | சேத நாட்டங்களை இழிவுபடுத்திக் கொள்வதற்கு முறையான நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டுவருபவை மற்றும் ஆரம்ப மீதிகள் விடுபடுதல் உள்ளடங்களாக விற்பனையாக கொள்ளப்படாத கணக்குகள் ரூபா 2,114,415 ஆனதுடன், அடிக்கடி இடம் பெற்றிருந்த பற்றாக்குறை மத்திய நிலையத்தின் வருமானத்துக்கு நேரடியாக தாக்கம் செலுத்தி இருந்ததுடன் இது தொடர்பாக அறிக்கை படுத்தல் அல்லது அவற்றை இழிவு நிலைப்படுத்தலுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கழங்கிய படுத்தும் மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் CCTV கேமரா கட்டமைப்பை திருத்தங்கள் மேற்கொண்டு நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக. | மேற்கொள்வதோடு ஆவணங்களை சரியாக நாளது வரை பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க மத்திய சுற்றாடல் அதிகார சபை உருவாக்கல் சட்டத்தின் 23 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அனுமதி பத்திரத்தின் கீழ் தவிறந்த சுற்றுச்சூழலை மாசு படுத்துகின்ற கழிவுகளை சுற்றுச்சூழலில் அகற்றுதல், சேகரித்து வைத்தல், அல்லது வெளியேற்றுதல் என்பன மேற்கொள்ளப்பட கூடாத போதிலும், மத்திய சுற்றாடல் அதிகார சபை அல்லது மேல் மாகாண திண்மக் கழிவு அதிகார சபையிலே பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மற்றும் 07 நபர்களுக்கு சபையினால் மீள்சுழற்சி மேற்கொள்ள முடியுமான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு இருந்தது. | மின் கழிவு, பொலித்தீன் பொதி செய்யும் பொருட்கள் மற்றும் இளநீர் கோதுகளை வருமானமீட்டக் கூடிய வகையில் கையளிப்பதற்கான நிறுவனங்கள் சிலவற்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு உள்ளதாக. | கழிவுகளை அகற்றும் போது குறிப்பிடப்பட்ட சட்டத்தின் உடனான நிறுவனங்களை தேர்ந்தெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டினுள் சபையினால் கண்ணாடி உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு வெள்ளை கண்ணாடிகள் 91300 கிலோ கிராம் மற்றும் பல்வேறு நிறங்களினான கண்ணாடி 4260 கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டு ரூபா 1,420,620 தொகையொன்று பெற்றிருந்த போதிலும், சபை நிதியத்துக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பெற்றுக்கொள்ள முடியுமான தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு காலப்பகுதியினுள் கண்ணாடித் துண்டுகள் விற்பனை வருமானங்களில் சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாத ரூபா 1,002,425 வருமானம் ஒன்று காணப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இது தொடர்பான முன்னேற்றத்தை அறிக்கைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்த தன்மையுடன் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதுருகிரிய மாவட்ட அலுவலகத்தின் நிர்வாக பிரிவின் மெகாசிட்டி கட்டிடத்தினுள் தாபிப்பதற்காக 2019 ஆம் வருடத்தில் 1300 அடி பரப்பளவான வளாகத்தில் இரும்பு தூண்களினாலான தகட்டின் மேற்பரப்பில் கொன்கிரீட் ஸ்லெப் ஒன்றை இட்டு அதற்காக ரூபா 3,253,840 தொகை ஒன்று ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 டிசம்பர் 26ஆம் திகதி அந்த ஒப்பந்தத்தின் பிடி பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதும் மீளாய்வாண்டிலும் அந்த நிர்மாண நடவடிக்கைகள் செயல்படுத்தப்படாதிருந்த துடன் மேற்குறித்த நிர்மாண பணிகளுக்காக செலுத்தப்பட்டிருந்த தொகை விளைவற்று காணப்பட்டது. | முழுமையான நிர்வாக அலகையும் இந்த கட்டிடத்துக்குள் கொண்டு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டதாக மற்றும் மேல் மாடியில் நில அளவை அதிகரித்துக் கொள்வதற்கு டெண்டர் விடப்பட்டபோது மதிப்பிடப்பட்ட தொகையை விஞ்சி டெண்டர் தாரரினால் விலை சமர்ப்பித்தல் மற்றும் சீரற்ற பொருளாதார நிலைமையின் காரணமாக உரிய செயல் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக. | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்மான செயற்திட்டங்களை திட்டமிடுவதற்கு முனைப்புடன் இருக்க வேண்டும். |

### 3.3 இணங்கானப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடுவெல மாவட்ட அலுவலகத்தின் 2023 ஜூலை 18ஆம் திகதியில் வீதி மின் கம்பங்களுக்காக மின்விளக்குகள் விநியோகிப்பதற்கு உரிய களஞ்சிய புத்தகங்கள் மற்றும் திகதியில் உள்ளவாரான களஞ்சியத்தில் காணப்பட்ட பௌதீக இருப்பு பரிசீலனை மேற்கொள்ளும் போது ரூபா 247,500 பெறுமதியான 18 வொட்ஸ் LED மின்விளக்குகள் 100 பற்றாக்குறையாக காணப்பட்டது. | இதற்காக விஷேட பரிசீலனையொன்றை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | களஞ்சிய புத்தகங்கள் நாளது வரையாக்கப்பட வேண்டியவுடன் அடிக்கடி பொறுப்புள்ள உத்தியோகத்தரால் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பூகோள தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 3,560,000 செலுத்தப்பட்டு 2015ஆம் வருடத்தில் தயாரிக்கப்பட்ட தகவல் கட்டமைப்புக்கான அனுமதி பத்திரம் | கட்டமைப்பை நாளது வரையாக்கள் அடிக்கடி மேற்கொள்ளப்பட வேண்டியவுடன் அது குறித்த காலப்பகுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டிய வேலை ஒன்று அல்ல. | தரவுகளை உள்வாங்கி கட்டமைப்பை நாளது வரையாக்கப்பட்டு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாமையின் காரணமாக அதை நாளது வரையாக்கப்படுவதற்கு அனுமதி பத்திரத்தின் உடனான மென்பொருள் ஒன்று 2021 ஆம் வருடத்தில் ரூபா 2,395,000 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் ஒப்பந்த காலம் 2024 பெப்ரவரி மாதத்தில் நிறைவடைவதற்கு இருந்த போதிலும் இதுவரை தரவு வரைவு படுத்தல் முன்னேற்றம், கட்டிடம் 50% உம், வீதி மின் கம்பங்கள் 15% உம் மற்றும் பொது வசதிகள் 10% உம் ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதன் பிரகாரம் ரூபா 5,955,000 செலவிட்டு தகவல் கட்டமைப்பை செயல்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்களை விட அதிக காலம் கடந்திருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஏற்படுகின்ற பௌதீக மாற்றங்கள் அனைத்தையும் அந்தந்த சந்தர்ப்பங்களிலே தரவு வரைவு படுத்தலுக்கு உள்ளடக்கப்பட வேண்டியுள்ளது. மின்விளக்குகள் மற்றும் பொது வசதிகள் காணிகள் தொடர்பாக துறையின் தகவல்களை பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற பிரச்சினைகள் காரணமாக முன்னேற்றம் பாதிக்கப்பட்ட போதிலும் அடிக்கடி அது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் நிறைவு செய்யப்படாத வேலைகளுக்கான மீதிகளை கணக்கிடும்போது குறித்த மதிப்பிடப்பட்ட தொகை நிறைவு செய்யப்படாத வேலையாக அடையாளப்படுத்தப்பட்டதன் காரணமாக நிறைவு செய்யப்படாத வேலைகள் கணக்குகளில் சரியான மீதியை வெளிப்படுத்தி இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | நிறைவு செய்யப்படாத வேலைகளை சரியாக அடையாளம் படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 செயற்பாட்டு செயற்திரனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடுவெல பஸ் தரிப்பிட வளாகத்தில் சபை நிதியத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 38 கடையறைகளில், 13 கடைகள் மீண்டும் சபைக்கு சுவீகரித்துக் கொள்வதற்கு மற்றும் டெண்டர் சமர்ப்பிக்காததன் காரணமாக மூடி வைத்ததன் காரணமாக 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் சபைக்கு ரூபா 2,946,150 ஆன வருமானம் ஒன்று இழக்கப்பட்டு இருந்தது. அவ்வாறே | வேறு பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முடியுமான வகையில் வியூகத்தின் உடனான திருத்தங்களை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு நகர பொறியியலாளருக்கு | மூடி வைக்கப்பட்டுள்ள கடை அறைகளை குத்தகைக்கு வழங்கி கடை வாடகை வருமானங்களை ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேலும் 04 கடையறைகள் 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களிலே முத்திரை இடப்பட்டிருந்ததுடன் மீண்டும் குத்தகைக்கு வழங்க முடியாததன் அடிப்படையில் கணக்காய்வு தினம் வரையிலும் அந்த கடைகளின் வருமானம் ஒன்று பெறப்படாமல் காணப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் மீண்டும் விலை மனு கோரப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | |
| (ஆ) கடுவெல பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள 04 கடை அறைகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2019 ஜனவரி 01ஆம் திகதி சபைக்கு சுவிகரிக்கப்பட்டு 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் 05 வருட காலம் கடந்திருந்த போதிலும் உரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) கடுவெல மாவட்ட அலுவலகத்திற்கு உரித்தான 06 கடையறைகளுக்காக 2013 ஜூலை மாத ஆரம்பத்தில் இருந்து டெண்டர் தாரர்கள் முன்வராதிருந்ததுடன், 10 வருடங்கள் அளவான காலத்தில் இருந்து அதிலிருந்து கிடைக்க பெற வேண்டிய வாடகை வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் முன் கலவை பிரிவொன்று அமைக்கப்பட்டு கார்ப்பட் போடப்பட்டு சாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக 2017 ஆம் வருடத்தில் ரூபா 66,612,047 செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 06 இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் செயற்திட்டம் செயல்படுத்தப்படாததன் காரணமாக 2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த முன் கலவை பிரிவிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 58,214,750 ஆன எஞ்சிய 04 இயந்திரங்கள் 2017 ஆம் வருடம் ஆகஸ்ட் 13ஆம் திகதியிலிருந்து 06 வருடங்களுக்கு அதிக காலம் விளைவற்று அத்துருகிரிய அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. | எஞ்சிய 04 இயந்திரங்களையும் விற்பனை செய்வதற்கு அவ்வாறான இயந்திரங்களை இறக்குமதி செய்யக்கூடிய நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | முறையான பெறுகைகள் திட்டமொன்றின் பிரகாரம் கொள்வனவு இடம்பெற வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கடுவெல பஸ் தரப்பிட வளாகத்தில் மேல் மாடி கடையறைகளுக்கு நுழைவதற்காக ரூபா 3,900,000 ஆன செலவில் 2013 நவம்பர் மாதம் தாபிக்கப்பட்டிருந்த மின் உயர்த்தி 2016 ஆம் வருடத்தில் செயலிழந்து 07 வருட காலங்களை கடந்திருந்த போதிலும், பழைய நிலைக்கு மாற்றப்பட்டு இருக்கவில்லை. 2021 டிசம்பர் 09 ஆம் திகதிய சபை தீர்மானத்தின் பிரகாரம் இது, பஸ் தரப்பிடத்திற்கு ஆக்கபூர்வமானதல்ல என்பதுடன் பிரதான அலுவலகத்தின் பொருத்தமான முறையில் அமைக்க பரிந்துரைக்கப்பட்ட போதிலும், கணக்காய்வு தினத்திலும் பஸ் தரிப்பிடத்தில் செயலிழந்த சொத்தொன்றாக காணப்பட்டது. | இந்த மின் உயர்த்தியில் காணப்படுகின்ற இரும்பு மற்றும் ஏனைய பாகங்கள் தொடர்பாக பரிசோதனையை மேற்கொண்டு பெறுமதியை மதிப்பிட்டு பின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருப்பதாக. | தேவையை அடையாளம் கண்டு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) 2023 ஆம் வருடத்திற்கான பொருட்கள் மெய்மை ஆய்வு சபையின் பரிந்துரையின் பிரகாரம் ஓட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த 08 உழவு இயந்திரங்கள், ஒரு கலி பவுசர், பொபழ கெட் இயந்திரம் ஒன்று மற்றும் முச்சக்கர வண்டி ஒன்று 2024 ஆம் வருடத்தின் 04 மாதங்கள் கடந்து இருந்த நிலையிலும் நீக்கப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எதுவும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | நீக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் துரிதமாக இடம் பெற வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) கடுவெல இலவச ஆயுர்வேத மருந்தகத்தின் கீழ் மீளாய்வாண்டிக்குள் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற 5 இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய 32 பணிகள் முன்மொழிய ப்பட்டிருந்த போதிலும், அதில் 12 விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமைப்படுத்தப்படாத அனைத்து இலக்குகளும் 2024 ஆம் வருடத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளஇலக்குகள் பூரணப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கால்நடைகள் மருத்துவ அலுவலகத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட தரங்களுக்கு இணங்க கால்நடைகளை விற்பனை செய்யும் கடைகளை நடத்துவது மற்றும் ‘‘விலங்குகளுக்காக நாங்கள்’’ என்ற செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்தில் செல்லப் பிராணிகளுக்காக 04 சந்தர்ப்பங்களில் கருத்தடை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக. | குறித்த கால பகுதிக்குள் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நகர பொறியியலாளர் திணைக்களத்தின் கீழ் 11 இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முன்மொழியப்பட்டிருந்த 21 விடயங்களில், 8 விடயங்களின் முன்னேற்றம் 55% ஐ விடவும் குறைவானதாகும். | 2024 ஆம் வருடத்தில் கூடிய கவனம் எடுத்து அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றிக் கொள்வதாக. | குறித்த காலப் பகுதிக்குள் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |